

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193796381-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 31. காலந்தோறும் கண்ணகிக் கதை

அ. மகபுபு
உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

சூழல் மனிதனை உருவாக்குகிறது. நல்ல சூழல் அவனை மேம்படுத்துகிறது. தமிழ் ஓர் இயல்மொழி ஆகும். இம்மொழி எண்ணற்ற செய்யுள்களைக் கொண்டது அவற்றைச் சங்க இலக்கியம் என்பர். அச்சங்க இலக்கியத்தின் மூலம் அக்காலத்தின் பாண்பாடு, பழக்கவழக்கம், நாகரிகம், வரலாறு போன்றவைகளை அறிந்துகொள்ள முடிகிறது. சங்க இலக்கியத்தில் மனிதன் இயற்கையோடு இயந்து வாழ்ந்த சூழலைக்காட்டுகிறது. ஆனால் இன்றைய அறிவியல் வளர்ச்சி இயற்கையின் வீழ்ச்சிக்கு வித்திட்டது. இன்று அவ்வீழ்ச்சியின் காரணமாக சுற்றுச் சூழலைப்பற்றிச் சிந்திக்க வேண்டியக் கட்டாயத்தில் உள்ளோம். சங்கம் மருவிய காலச் சூழலை அறிய அக்கால நிலையில் உள்ள இலக்கியங்களின் வழி அறிந்து கொள்ள உதவுகிறது. எல்லாக் காலத்திற்கும் ஏற்ற படைப்புகளை உருவாக்குவது அரிது தொன்று தொட்டு மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் படைப்புகளில் ஒன்று சிலப்பதிகாரம். காலத்தால் அழிக்க முடியாத சிலம்பு காலந்தோறும் பெற்ற மாற்றங்களைக் காரணங்களுடன் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## காலந்தோறும் கண்ணகி கதை

சிலம்பு வரலாற்றைக் கூறும் படைப்புகளை இருபெரும் நிலைகளில் பாகுபடுத்தலாம். வாய்மொழியாக மக்களிடையே வழங்கிய பின் ஏட்டில் இடம் பெற்றவை. கதைச் செல்வாக்கால் பல படைப்புகளாக உருவானவை அவற்றை

1. வாய்மொழி (அ) நாட்டுப்புற இலக்கியம்

2. ஏட்டிலக்கியம்

என வகைப்படுத்தலாம் சிலம்பு வரலாறு வாய்மொழியாகப் பல்லாண்டு காலம் வழங்கி வந்துள்ளது பின் புலவர்களால் ஏட்டில் இடம் பெற்றுள்ளது. இதன் வாய்மொழித் தோற்றம் அறிதற்கரியது. இன்று கிடைக்கும் வாய்மொழி இலக்கியங்களுக் கெல்லாம் தலைமை சான்றாக விளங்குவது புகழேந்திப் புலவர் பெயரில் வழங்கிவரும் கோவிலன் கதையே ஆகும். சிலம்புக்கதை வாய்மொழியாக வழங்கி வந்ததற்குச் சிலம்பிலும் சான்றுகள் உள்ளன. சாத்தனார் தாம் அறிந்த கண்ணகியின் வரலாற்றை இளங்கோவிடம் கூறியதாகப் பதிகம்:[1] செங்குட்டுவனிடம் கூறுவாகக் காட்சிக்காதையும் குறிப்பிடுகின்றன. சாத்தனாரைப் போன்று வியத்தகு நிகழ்ச்சிகளைக் கொண்ட கதையை புகார், மதுரை நகரத்து மக்களும் அறிந்திருப்பர் என்பது விளங்கும். அம்மக்கள் அறிந்த அக்கதை நாளடைவில் கேட்போர், கூறுவோர் சுவைச் சூழலுக்கு ஏற்பவும், காலத்தின் தேவைக்கேற்பவும் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வழங்கி வந்திருக்கக்கூடும். இவ்வகையில் உருவானதே கோவிலன் கதை என்னும் அம்மானைப் பாடலும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள பிற கதைப்பாடல்களும் ஆகும்.

## முதுவர்களைப் பற்றிய தொன்மைக்கதை

முதுவர் என்பவர் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் வாழ்கின்ற ஒரு பழங்குடியினர் ஆவார். முதுவர் என்பதன் பெயர் காரணத்தைக் கூறுகையில், கண்ணகி மதுரையை எரித்த கையோடு கோபம் கொஞ்சமும் குறையாமல் கால்போன போக்கில் போய்க் கொண்டிருந்தாள். அப்படிப் போய்க் கொண்டிருந்தவளைப் பல்லக்கு ஒன்றில் அமர்த்தி அதனைச் சுமந்தபடி சென்ற நான்கு குடும்பங்கள் மதுரையிலிருந்து பாதுகாப்போடு அழைத்துச் சென்றனர். இப்படி குழந்தைகளையும் மற்றவர்கள் அத்தியாவசியப் பொருள்களையும் தம் முதுகில் சுமந்தப்படிச் சென்றனர். இப்படி குழந்தைகளையும் சுமைகளையும் முதுகில் இன்றும் லாவகமாக சுமந்து செல்வதாலேயே இவர்கள் முதுவர் என்று அழைக்கப்பட்டனர்.

ஆனைமலை வழியாகச் செல்லும் போது கண்ணகி நீங்கள் இங்கேயே இருந்து விடுங்கள் நகர்ப்புறம் நீங்கள் வாழத் தகுதி இல்லாததே இந்த மலை தான் இனி உங்கள் வாழிடம் எனக் கட்டளையிட்டு விட்டு தனியே சென்று விட்டார் அன்றிலிருந்து இன்று வரை அந்த ஆனைமலையை தங்கள் வசிப்பிடமாகக் கொண்டு அவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது கண்ணகியே அமர்த்தி வந்த பணத்திரமாக பாதுகாத்து வருவதாகச் சொல்கின்றனர் கண்ணகி காளியின் மறு உருவமாக பொருட்களைப் பாவித்து, தை மாதத்தில் பூசை நிகழ்த்துகின்றனர் இவைகள் வாய்மொழி இலக்கியமாக சங்க இலக்கியத்திலும் சான்றுகள் உள்ளன.

## புறநானூற்றில் கண்ணகி கதை

சிலம்பின் தலைவி கண்ணகி இவன் இரண்டாம் நூற்றாண்டாக சிலப்பதிகாரத்தில் தான் முதலில் பிறந்தாள் என்று சொல்வதற்கில்லை கண்ணகி நிகழ்ச்சியோடு ஒத்த சில குறிப்புகள் சங்கப் பாடல்களிலும் உள்ளன அந்த வள்ளல் தன் மனைவியைத் துறந்தான் பொருந்தாத உறுதியுடன் உறவு கொண்டான் பின்பு அவன் மனைவியை மிகவும் துன்புறுத்தியது அதை சில புலவர்கள் கண்டார்கள் வள்ளலிடம் முறையிட்டார்கள் அவளுக்காக கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க் கிழார் என்ற புலவர்கள் வாதாடினார்கள் அறிவுறுத்தினார்கள். ஆனால், அவனின் மனம் மாறவில்லை அவன் தன் காதலியின் மனையில் விடுதல் அறியா விருப்பினனாகி மயங்கிக் கிடந்தான் என்ற செய்தியை புறநானூற்று பாடல்-143,47 அமைந்துள்ளது இதைப் போன்றே நற்றிணையில் உள்ளது

## நற்றிணையின் திருமாவுண்ணி

நற்றிணையில் தலைவனைப் பிரிந்து வாடிய காதல் படத்தை தன் பிரிவுத் துயரம் அவன் காதுக்கு எட்ட வேண்டும் என்பதற்காக தலைவிக்கு பாங்காயினார் கேட்கும்படி தன் துயரம் பற்றிக் கூறுகிறான் மதுரை மருதனிளநாகனார் அந்த பாடலை

பாடியுள்ளார். நற்றிணை பாடல் 20 பேர் அன்புக்குரிய ஒரு காதலன் தன் அன்பை தூர எறிந்துவிட்டு அயலான் போல் ஆகிவிட்டான் அவனைப் பிரிந்து வாடும் துயரம் தாங்க மாட்டாமல் தன்னை அறுத்து எறிந்தார் திருமாவுண்ணி என்ற பெண் அவளுடைய நிலை பிரிவுத்துயர் தாங்கமாட்டாமல் வாடும் நிலைக்கு எடுத்துக்காட்டாக கூறப்படுகிறது கவலை கவற்ற ஒருமுறை அழுத்த திருமாவுண்ணி என்ற வரிகள் சான்று பகர்கின்றன.

## கோவிலன் கதை

புகழேந்திப் புலவர் பெயரில் பல அம்மானைப் பாடல்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் ஒன்று கோவிலன் கதை ஒன்றும் 11ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வழங்கிய வழங்கிய இதன் மூலம் மலையாள நாட்டில் 6 ஆயிரம் வைசிய செட்டியார் வழியாக பரவி இன்று விசாரிகளில் மந்திரமாகவும் வழங்கி வருவதாக பி.எல்.சாமி குறிப்பிடுகின்றார்.

சிலம்பு கோவலன் கண்ணகி திருமணத்தில் தொடங்க இது இவர்களின் முற்பிறப்புக் கதையிலிருந்து தொடங்குகிறது. செட்டி எனும் வணிகன் பிள்ளை வரம் வேண்டி, அதில் காமதேனு என்னும் பசு கையினாலே கயிலாயத்தில் இருந்து வந்து வேலை முடிச்சுட்டு செய்கிறது கண்டு விருப்பத்திற்கு ஏற்ப இரண்டுமே ஒப்பிடும்பொழுது பட்டிமாடு மேய்கிறது என்று கண்டறிய கண்டு இறந்து விடுகிறது. பசு சாபம் தருகிறது 16 வயது வரை வளர்த்த கன்று இறந்தது போன்று உன் மகன் இறக்கக் கடவான் என்று சாபமிட்டு கைலாயம் செல்கிற இரண்டு மனைவியுடன் வாழ்ந்த மணியரசன் என்னும் வணிகன் தன் சொத்தை இரண்டு பாகமாக்கி முதல் தாரம் மகன் மூவருக்கு ஒரு பங்கும், இளைய மகன் மூவரும் ஒருவனுக்கு ஒரு பங்குமாக அடிக்கிறான் தன் குலவழக்கப்படி இளைய மகன் என்னைக் குடம் எடுத்து விற்பனை செய்கிறான். விற்பனை ஆகி விடுவதாக அனைத்தும் விற்பனையாகி விடுகிறது அதன்படி கோயிலில் விளக்கேற்றுகிறான்.

மதுரையை ஆண்ட பாண்டியர்கள் குழந்தைகளே இல்லாததால் காளியின் கோயிலில் கிடைத்த பாண்டியன் மீறிச் செல்பவர்களுக்கு தண்டனை என்று ஆணையிட்டிருக்கிறார். இளைய மகன் உன்னை விட மூத்த தாரத்தின் மகன் காட்டிக்கொடுக்க உபகாரம் செய்தேன் அபகாரம் நேர்ந்தது மைந்தன் பணிக்கு நாளை மதுரையைப் பழிவாங்குவேன் என்று காளி கூறி இருக்கிறாள். கணவனின் மறைவினால் வாணச்சியும் இழக்கிறாள். மூவர்களின் உயிரையும் மதுரை சொக்கநாதர் தங்கச்சிமிழில் அடைத்து வைத்தார். இவர்களே கோவலனாக கண்ணகியாக, மாதவியாக மறுபிறவி எடுப்பதாகக் கதை சில நாட்டுப்புற வழக்காறுகளுடன் தொடர்கிறது. இதில் பல மாற்றங்களுடனே காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி சிலம்புக் கதை மாறுபட்டு இன்று காப்பியமாக உருவாகியிருக்கக் கூடும்.

## முடிவுரை

"ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி" என்ற இளங்கோவின் கண்ணகி தமிழகத்தில் துர்க்கையாக, காளியாக, அம்மனாகவும் கேரளத்தில் பகவதியாகவும் ஈழத்தில் கண்ணகி அம்மனாகவும் வழிப்படப்படுகிறாள். இவ்வழிப்பாடு அங்கெல்லாம் பரவுவதற்கு தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சமே காரணம் என்று சிலம்பின் உரைபெறு கட்டுரை வழி அறிய முடிகிறது. காப்பியத்தில் இளங்கோ சாத்தனாரிடம் மட்டும் அல்லாமல் மக்களிடமும் கேட்டு அவற்றை காலத்தின் தேவைக்கு ஏற்றபடி இயற்றியிருப்பார் என்பது இதன் வழி புலனாகிறது.